9

# அவதிகளில் அன்பரது அடிச்சுவடுகள்

Jesus' Footsteps of Pain

### *முகவுரை*

- விவிலியத்தில் பல இடங்களில் இயேசுவைப் பின்பற்ற அழைக்கப் படுகிறோம்; ஒரே இடத்தில்தான் அவரது *''அடிச்சுவடுகள்''* —
  1 பேது 2:21-23

  இங்கு பேசப்படுவது பாடுகள், வேதனைகள், துக்கங்கள், முதலியன. துவக்கம் முதல் முடிவு வரை அவரது வாழ்க்கை பாடுகளாலும் வேதனைகளாலும் நிறைந்திருந்தது —

### *வேதனைப் பாதையில் அவரது அடிச்சுவடுகள் ...*

☐ வீட்டிலோ மருத்துவமனையிலோ அல்ல, மாட்டுத் தொழுவத் திலேயே பிறந்தார் — விடுதியறைகூட கிடைக்கவில்லை!
லூக் 2:7

☐ வீட்டில் வசதியாய் வாழ்வது அவருக்கு அடிக்கடி கிடைக்க வில்லை—
மத் 8:19,20 ... *நரிகள் ... பறவைகள் ...*
நாடோடி வாழ்க்கைதான்!

முன்னோடி மிஷனரிகள் பலருக்கு இப்படித்தான்.

நாம் வசதியாய் வீட்டிலிருந்தாலும் அசவுகரியங்கள் குறித்து எவ்வளவாய் முறுமுறுக்கிறோம்!

எ.கா.) மின்வெட்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு, கழிவுநீர் அடைப்பு, கொசுத் தொல்லை, குரங்குகள் அட்டகாசம், போன்றவை.

எரிச்சலின் ஆவியும், குறைசொல்லும் மனதும் கிறிஸ்தவனின் நறுமணத்தைக் கெடுக்கும்.

☐ சில இல்லங்களில் இயேசுவுக்கு அடிப்படையான ஆசாபாசங்கள்கூட கிடைக்கவில்லை —
லூக் 7:36 ... ஒரு பரிசேயனின் வீடு
:40 ... இயேசு போதகரென்பது அவனுக்குத் தெரியும்.
:44-46 ... *தண்ணீர் ... முத்தம் ... எண்ணெய்*



திருமண வைபவங்களிலும் இவை போன்ற நிகழ்ச்சிகளிலும் நன்றாய்க் கவனிக்கப்படாவிடில் எவ்வளவு கசந்துகொள்கிறோம்!

இவ்விதம் புண்பட்டதை இயேசு எவ்விதம் மேற்கொண்டார்?
தமது பிரதான பணியிலேயே கவனம் செலுத்தினார் —
வச 48,50 ... பாவிகளுக்கு மன்னிப்பு , இரட்சிப்பு

☐ பயணிக்கும் பிரசங்கியாராய், நேரத்துக்கு நேரம் சாப்பிடமுடியாது, அவருக்கு அடிக்கடி பசியுண்டாயிற்று —

பழமேதும் இருக்கிறதாவென மரத்தைப் பார்ப்பார்!
வைபவங்களில் நன்றாகவே சாப்பிட்டிருப்பார் —

குற்றச்சாட்டு: *சாப்பாட்டுப் பிரியன்! ...*
மத் 11:19 ... *போஜனப் பிரியன் ... மதுபானப் பிரியன்*
(சாப்பாட்டு ராமன் ... குடிகாரன்)

அவர் குறிப்பிட்டது: *''பசியாயிருந்தேன் ...''* (மத் 25:42,43)

☐ கடனுக்கு வாங்கிய கல்லறையிலேயே அடக்கம் —
மத் 27:57-60 ... யோசேப்பின் கல்லறை
அடக்கத்திற்கு இடம் முன்பதிவு செய்வோர் எத்தனை!

### *1. அவதூறு/குற்றச்சாட்டு எனும் வேதனை*

☐ அவரது கன்னிப்பிறப்பு மறைமுகமாய்த் தாக்கப்பட்டது —
யோ 8:41
மணமாகாதவளுக்கு அவர் பிறந்தது பல ஆண்டுகள் அவ்வூரில் பேச்சாயிருந்திருக்கும்.

☐ *''நீ ஒரு சமாரியன்; உனக்குப் பிசாசு பிடித்திருக்கிறது''*
யோ 8:48

*''சமாரியன்'' — உங்கள் பிதாவாகிய ஆபிரகாமின் செயல்களைச் செய்யவில்லை* (வச 39)

*''பிசாசு பிடித்தவன்'' — பொய்க்குப் பிதாவாம் பிசாசினால் உண்டானவர்கள்* (வச 44)

இயேசுவைச் ''சமாரியன்'' என்றழைத்தது, அவர் யூதப் பாரம்பரியத்தின்படி நடக்கவில்லை என்பதற்கான குற்றச்சாட்டு!

□ *''உனக்கு ஐம்பது வயதுகூட ஆகவில்லை''* (யோ 8:57)

அதாவது, நீ அனுபவமற்றவன், நூதன்.
பொதுப்பணி எதற்கும் 50 வயதுதான் தகுதியானதாய்க் கருதப்பட்ட காலமது.

□ *''அவர் மதிமயங்கியிருக்கிறார்''* (மாற் 3:21)

அவருக்குப் பிடித்திருப்பது சாதா பிசாசு அல்ல;
பிசாசுகளின் தலைவன் பெயெல்செபூல் (வச 22).

நமக்கு இதைவிட மோசமான பெயர் கிடைக்கும் —
மத் 10:25

நம்மைப் பிறர் நன்றாய் நடத்துவாரென எதிர்பார்க்கக்கூடாது —
வச 24,25 ... *''சீடன் / குரு''* ... *''வேலைக்காரன் / எஜமான்''*

□ குற்றச்சாட்டுடன் **கேலியும்** வருகிறது —

— *தீர்க்கதரிசனம் சொல்லு* (மாற் 14:65) — வரம்
— *இராஜாவே, வாழ்க!* (மாற் 15:18-20) — தலைமை
— *உன்னை இரட்சித்துக்கொள்!* (மாற் 15:29-31) — ஊழியம்

## 2. தள்ளப்படுதல் எனும் வேதனை

மாற் 6:3,4 ... சொந்த ஊரார், இனத்தாரால் புறக்கணிப்பு.
லூக் 20:17 ... *தலைக்கல்* ஆன *தள்ளப்பட்ட கல்.*

இது திடீரென நிகழ்வதல்ல —
மூன்று நாட்கள் கல்லறையிலிருக்க வேண்டியதாயிற்று
(அப் 2:26)

இது ஏசா 53:3இல் முன்னறிவிப்பு.

அவர்கள் இயேசுவுக்குப் பதிலாக விரும்பியது —
லூக் 23:18,19 ... *பரபாஸ்* — அவப்பெயர் பெற்ற கொலையாளி!
பரபாசின் முழுப்பெயர் — *''இயேசு பரபாஸ்''* (பர்-அப்பா)

இதைப் பேதுரு சுட்டிக்காட்டுகிறார் —
அப் 3:14,15 ... *பரிசுத்தர் ... நீதியுள்ளவர் ... கொலைகாரன்*

நம்மைவிடச் சிறந்தவர் வேண்டுமென்றல்ல,
நாம் வேண்டாமென்றே உலகம் நம்மைப் புறக்கணிக்கிறது!



இவ்விதச் சூழலை மேற்கொள்வதெப்படி —
''நம்மைப் பகைக்குமுன் அவரைப் பகைத்தது'' எனும் அறிவு
(யோ 15:18)

அறவே ஒதுக்கப்படும்வரை முழுமையாய் எவனும் ஏற்கப்படான்.
உலகம் ஏன்தான் நம்மைப் பகைக்கிறது? —
*''முகாந்தரம்* (காரணம்) *இல்லாமல் ...''* (வச 25)

*''ஆனால்''* தேற்றரவாளன் வரும்போது ... (வச 26)
இதற்காகவே பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் அனுப்பப்பட்டார்.

## 3. தனிமை எனும் வேதனை

தேவனது பிள்ளைகளில், அதிலும் கிறிஸ்தவத் தலைவர்களில்,
எவரும் இவ்வேதனைக்குத் தப்பமுடியாது.

பன்னிருவரை இயேசு தெரிந்தெடுத்ததின் பிரதான நோக்கம் —
மாற் 3:14 ... *அவர்கள் அவரோடிருக்க ...*

பிதாவானவரோடு நேரம் செலவழிக்க விரும்பியது தவிர்த்து,
எப்பொழுதும் சீடரைத் தம்மோடு கூட்டிச் சென்றார் —

அவர்களோடு உரையாடினார்.
அவர்களோடு உழைத்தார்.
அவர்களோடு உணவருந்தினார்.
அவர்களோடு உறங்கினார்.

அவர்கள் அவருக்கு அதிகமாய்த் தேவைப்பட்டபோதோ,
தவறினர் —
மத் 26:38 ... *''என்னோடு விழித்திருங்கள்''*
:40 ... *''என்னோடு விழித்திருங்கள்''*

ஏற்கனவே முன்னுரைக்கப்பட்டது: ஏசா 59:16 / 63:5
*''துணை செய்வார் ... தாங்குவார் ... இல்லை ... ஆச்சரியம்!''*

□ நம்மோடு ஜெபிக்கக்கூட ஒருவருமில்லை எனும் நேரம் வரலாம். மக்களுக்குத் தங்கள் பிரச்னைகளே அதிகமோ, நமது வேதனையில் பங்குபெறத் தயக்கமோ காரணமாயிருக்கலாம் (லூக் 22:44,45)

இதுவே மறுரூப மலையிலும் நடந்தது (லூக் 9:30-32)
(பேதுருவும் மற்றவர்களும் ... *நித்திரை மயக்கம்)*

இவ்வித வேளைகளில் நமக்குதவ தேவன் பணிவிடைத் தூதரை அனுப்பிவைப்பார் —

லூக் 22:43 ... விடுவிக்க அல்ல, *பலப்படுத்த* (வச 44)

□ தங்களது முன்னேற்றத்திலேயே மக்கள் கரிசனை கொள்வது அவர்கள் நமக்குதவாததற்குக் காரணமாயிருக்கலாம் —

லூக் 22:24 ... காட்டிக்கொடுத்தலைப்பற்றி அவர் பேசுகையில் (வச 21), அவர்களுக்குள் போட்டா போட்டி!

இதுதான் கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது!
*''சிநேகிதர் வீட்டில் பட்ட காயங்கள்''* (சக 13:6)

- தனிமையெனும் வேதனை சாதாரணமானதல்ல —
  தூங்க முடியாது சிரமப்படலாம் (சங் 102:7)

தேவனே நம்மைக் கைவிட்டதுபோல் தோன்றும்போது தனிமை உச்சத்தை எட்டும் —

மாற் 15:33,34 ... *இருள்* ... மதியம் 12 முதல் பிற்பகல் 3 வரை.
*''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?''*

தேவன் நிசமாகவே இயேசுவைக் *''கைவிட்டாரா?''*
நாம் திட்டமாய் எதையும் சொல்லமுடியாது!

ஆனால் மானிடத்தில் இயேசு அவ்வாறே உணர்ந்தார்.
''என் பிதாவே'' என்றல்ல, *''என் தேவனே''* எனக் கதறினார்!

இவ்வித வேளைகளில் சங்கீதம் 77ஐ வாசியுங்கள்.

இது தாவீதின் சங்கீதமல்ல; இசைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கும் தாவீது நியமித்திருந்த மூன்று குடும்பங்களில் ஒருவர்தான் ஆசாப். இக்குடும்பத்தின் 12 சங்கீதங்கள் வேதத்திலுண்டு —

1 நாளா 25:1,2; சங் 77:7,8,9 ?????? (6 கேள்விகள்)
*சேலா!* (வச 9) — போதும், நிறுத்து!
*''இது எனது பலவீனம்!''* (வச 10)

தேவனது ''வழி'' எங்கே?
அ) *பரிசுத்த ஸ்தலத்தில்* (வச 13) ... இருள்
ஆ) *கடலில்* (வச 19) ... *''காலடிகள் தெரியவில்லை!''*
இ) *புயலில்* (நாகூம் 1:3) ... குழப்பம்



இயேசுவின் காலடிகளைப் பின்பற்றிச் செல்லுவது ''தெரியாத உலகிற்குள் பயணம்'' போலிருக்கும் —

ஆனாலும், அவர் **நடத்துவார்** (சங் 77:20)

அவரது காலடிகள் தெரியும்வரை அவரைப் பின்பற்றுங்கள்;
காலடிகள் தெரியாதபோது, அவர் கைகளைப் பிடித்துக்கொள்ளுங்கள்;
அவர் உங்களை நடத்துவார்!

- **சங்கீதப்** புத்தகத்தைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள்.
  கிறிஸ்துவின் பாடுகளுக்கு நிறைய குறிப்புகள் —
  - □ *ஒரு புழு* (22:6)
  - □ *சிறுமையும் எளிமையுமானவன்* (40:17)
  - □ *என் சகோதரர்க்கு வேற்று மனிதன்* (69:8)
  - □ *இதயத்தைப் பிளக்கும் நிந்தை* (69:20)
  - □ *சிறுமையும் துயரமுமுள்ளவன்* (69:29)
  - □ *வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவி* (102:7)
  - □ *புல்லைப்போல் உலர்ந்துபோகிறவன்* (102:11)

■ தேவையானதொரு திருத்துதல் உபதேசம்:

இன்றையப் பிரபலப் போதனை:
கிறிஸ்து பாடனுபவித்ததால் நாம் பாடுபடத் தேவையில்லை.

திருமறையின் போதனையோ வேறு —

□ கொலோ 1:24... *பாடுகள் ... குறைவாயிருப்பதை நிறைவாக்க ...*
''ஆசீர்வாதப்'' பாத்திரம் என்பது
''பாடுகளின்'' பாத்திரம்தான் (பாடுகளில் ஸ்நானம்)

□ 2 கொரி 4:8-10 ... *மரணத்தை எப்பொழுதும் சுமந்து திரிகிறோம்*

□ ரோ 8:35 ... *எந்நேரமும் கொல்லப்படுகிறோம் ...*
— எதனால்? (வச 36)...
*உபத்திரவம்... வியாகுலம்... துன்பம் ...*

இது பாவத்திற்கான சிட்சையல்ல (சங் 44:20-22).
வேதனையின்றிச் சாதனையில்லை!

□ வியாதிகளும் உள்ளடக்கம்

எ.கா.) *மாம்சத்தில்* (உடலில்) *முள்* (2 கொரி 12:7)

எல்லாம் கிறிஸ்துவினிமித்தம் (வச 10)

சில வேளைகளில் சுகம்;
பல வேளைகளில் சகிப்புக்குப் பலம்.

□ லூக் 23:31 ... *பச்சை மரம்* vs. *பட்ட மரம்*

## *முடிவுரை*

□ சங் 17:14 ... இவ்வுலக ஆசிகளில் திருப்தியில்லை.
:15 ... *நானோ ... உமது சாயலால் திருப்தியாவேன்!*

1 யோ 3:2 ... *அவர் இருக்கிறவண்ணமே அவரைத் தரிசிப்போம்;*
*அவருக்கு ஒப்பாயிருப்போம்!*

அவரது அடிச்சுவடுகளில்!

